கோமரங்கடவல பிரதேச சபை - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கோமரங்கடவல பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாட்டுக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுடனான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கோமரங்கடவல பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல்

மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2023 நவம்பர், டிசம்பர் மாதங்களுக்காக கடன் பட்டோர் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 400,000 தொகைக்காக 2024 ஆம் வருடத்தினுள் கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 632,750 தொகை கடன் பட்டோராக குறிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உண்மையான கடன் பட்டோர் மீதி மற்றும் திரண்ட நிதியம் ரூபா 232,750 ஆல் குறைவாக காட்டப்பட்டிருந்தது	2025 ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சீராக்கம் செய்து சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்குகளை சரியாக தயாரிக்க வேண்டும்.
(ஆ)	நடப்பு வருடத்தில் 03 செயற் திட்டங்களுக்குரிய செலுத்தப்பட வேண்டிய ரூபா 2,852,454 ஐ கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கிடப் பட்டிருந்தது.	-மேற்படி-	-மேற்படி-
(இ)	வருட இறுதியில் கிடைக்கப்பெற வேண்டிய ரூபா 207,537 ஆன நிலையான வைப்பின் வட்டி நிலுவைகளின் பெறுமதி கணக்குகளில் காட்டப்பட்டிருக்க வில்லை.	-மேற்படி-	-மேற்படி-
(ஈ)	கோமரன்கடவல மற்றும் மதவச்சிய இரண்டு நீர் உத்தேச	-மேற்படி-	-மேற்படி-

திட்டங்களிற்குரியதாக நீர் இணைப்பு வழங்கும் போது அறவிட வேண்டியதாக இருந்த ரூபா 1,523,031 ஆன மாணிக் கட்டண பெறுமதியை கணக்கிற்கு எடுத்திருக்கவில்லை.

1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டில் டிசம்பர் 31 ஆம் திகதியில் கணக்கீட்டு விடயங்கள் 05 இன் இறுதி கணக்கின் பிரகாரம் ஆரம்ப மீதி மற்றும் உப பதிவேட்டின் பிரகாரம் ஆரம்பம் மீதிகளுக்கு இடையில் ரூபா 330,168 ஆன இணக்கமின்மையொன்று காணப்பட்டது.	எதிர் வரும் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் போது சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இணக்கமின்மைகளை சீர் செய்யப்பட்டு கணக்குகள் இணக்கம் செய்யப்பட வேண்டும்.

1.6.3 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டிருந்த கூட்டு மொத்தம் ரூபா 156,795,151 ஆன பெறுமதியான 04 கணக்கு விடயங்களுக்காக உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள், நிலையான சொத்துக்கள் பதிவேடு, இருப்பு கணக்கெடுப்பு அறிக்கை மற்றும் களஞ்சிய பதிவேடு போன்ற சாட்சிகள் சமர்ப்பிக்கப்படாமையினால் திருப்திகரமாக பரீட்சிக்க முடியாமல் இருந்தது.	எதிர்காலத்தில் இந்த அனைத்து ஆவணங்களையும் தயாரித்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படு வதாக.	கணக்கு மீதிகளை சான்றுறுதிப் படுத்தக்கூடிய வகையில் சரியான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1.7 இணங்காமைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம்			
	(i) 24 பிரிவு	சபையினால் நிர்மாணித்துள்ள பாதைகளை பொருட்பதிவேட்டில் பதிந்து அப் பாதைகளை வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	பாதைகள் தொடர்பான தரவுகள் இற்றை படுத்தல் ஆரம்பிக்கப்பட்டு இருப்பதுடன் எதிர்காலத்தில் இந்தப் பாதைகள் வருத்தமானியில் பிரசுரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக.	பிரதேச சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
	(ii) 159 பிரிவு	மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டிய ரூபா 9,039,778 நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	நிலுவை வருமானங்களை துரிதமாக அறவிட்டுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக.	பிரதேச சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஆ)	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(2) பிரிவு	கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய செயலாற்றுகை அறிக்கை கணக்கீட்டு உத்தியோகத்தரினால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை	பதில் வழங்கப்படவில்லை.	கணக்காய்வு சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(இ)	1989 ஏப்ரல் 17 திகதிய இலக்கம் 554/5 கொண்ட அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1988 பிரதேச சபை நிதி மற்றும் நிருவாக விதி 218 ஆம் விதி	கிரயம் ரூபா 145,162,395 ஆன காணிகள் மற்றும் கட்டிடங்களை ஆண்டிற்கு ஒரு முறை மதிப்பீடு செய்திருக்கவில்லை.	எதிர்காலத்தில் சீர் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக.	பிரதேச சபை ஒழுங்குவிதிகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் 138	அனைத்து கொடுப்பனவுகளும் உரிய அதிகாரியினால் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதும் 06 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 715,460 பெறுமதியான கொடுப்பனவுகள் உறுதிசெய்யப்படாது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன.	எதிர் காலத்தில் சரிசெய்து கொள்ள நடவடிக்கை எடுப்படும்.	நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ)	பொது நிருவாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 02/2018 சுற்றறிக்கை	மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை.	எதிர்காலத்தில் தயாறித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக.	பொது நிருவாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கை பிரகாரம்

				நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஊ)	நீதிமன்ற அமைச்சின் செயலாளரின் இலக்கம் 04/1994 மற்றும் 1994 பெப்ரவரி 18 திகதிய சுற்றறிக்கை	ஒவ்வொறு பதவிநிலை உத்தியோகத்தரினாலும் வருடாந்தம் தமது சொத்துக்கள் பொறுப்புக்களை வெளிப்படுத்த வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	எதிர்காலத்தில் சரியாக மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக.	நீதி அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,176,025 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,510,982 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தவிசாளினால் சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

	2024				2023			
வருமான மூலம்	மதிப்பிடப்பட்ட வருமானம்	பில் போடப்பட்ட வருமானம்	சேர்க்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பிடப்ப ட்ட வருமானம	பில் போடப்பட்ட வருமானம	சேர்க்கப்பட்ட வருமானம	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
	ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000
வியாபார மற்றும் குத்தகை வாடகை	650	425	535	297	500	381	381	407
நீர் கட்டணம்	1,200	1,614	1,437	1,523	1,000	1,158	712	1,346
ஏனைய வருமானம்	500	1.135	1,252	213	535	329	-	330
மொத்தம்	2,350	3,174	3,224	2,033	2,035	1,868	1,093	2,083

2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2024 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 296,752 ஆன நிலுவை வாடகை வருமானமொன்று காணப்படுவதுடன் அதில் ரூபா 173,392 ஆன வாடகை வருமானங்கள் பல வருடங்களாக நிலுவையாக காணப்பட்டிருந்தது.	வருமான பரிசோதகருக்கு அறிவிக்கப்பட்டு நிலுவை வாடகை வருமானங்களை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக.	நிலுவை வாடகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டத்தினால் விதிக்கப்பட்ட செயல்பாடுகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் சபையினுள் வருமானங்களை ஈட்டிக் கொள்ளக்கூடிய துணை விதிகளை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் துணை விதிகளை விதிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளதாக.	பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	அதிகாரப் பிரதேசத்தில் மேற்கொள்ளும் காணி அபிவிருத்தி நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல் மேற்கொள்ள வேண்டிய போதிலும், 2021 மற்றும் 2024 ஆகிய வருடங்களுக்கிடையில் ஒரு விண்ணப்ப பத்திரமாவது கிடைக்கப்	கிராமிய பிரதேசம் ஒன்று என்பதனால் கட்டிடம் நிர்மாண பணிகள் இழிவு மட்டத்தில் மேற்கொள்ளப்படுவது இதற்கு காரணம் என்பதாக அவதானிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் பிரதேசத்தில்	காணி அபிவிருத்தி நடவடிக்கைகள ஒழுங்குபடுத்தல் வேண்டும்.

	பெறாதிருந்ததுடன் நிறுவனத்தினால் பேணப்பட்டு வந்த அனுமதியற்ற நிர்மானங்களின் கோப்பினுள்ளும் அவ்வாறான நிர்மாண பணிகள் எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.	அவ்வப்போது மேற்கொள்ளப்படுகின்ற நிர்மாண பணிகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக களப்பரீட்சிப்பொனறின் ஊடாக அடையாளப்படுத்தப்பட்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக.	
(ஆ)	சபையின் அதிகாரப் பிரதேசத்தில் ஒன்று திரட்டப்படுகின்ற கழிவுகள் பகிர்க்கப்படாமல் ஒன்று திரட்டப்பட்ட அந்த கழிவுகள் வனசீவராசிகள் வலயமொன்றான கிபுள்மெடியாவ, கோமரங்கடவல ஆகிய இடங்களில கொட்டப்படுவதாக அவதானிக்கப்பட்டுள்ளது. 2021 ஆம் வருடத்தினுல் கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தின் மூலம் கொம்போஸ்ட் செயற் திட்டத்திற்காக ரூபா 10 இலட்சம் ஏற்பாடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் ஊழியர்களின் பற்றாக்குறை, இயந்திரங்கள் போதுமான அளவு இல்லாமை, முறையான பயிற்சி ஒன்று கிடைக்க பெறாமை போன்ற காரணங்களினால் இந்த செயற் திட்டம் தோல்வியில் உள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.	சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் கூடுதலான அளவு கழிவுகள் சேகரிக்கப்படுவதில்லை என்பதுடன் குறைவாக சேகரிக்கப்படுகின்ற கழிவுகளில் கூடுதலான சதவீதமான கழிவுகள் உக்கக்கூடிய கழிவுகளாக காணப்படுவதுடன் மக்கள் குடியிருப்பு அற்ற கிபுள்மெடிய பிரதேசத்தில் இவை கொட்டப்படுவதுடன் எதிர்காலத்தில் இந்த இடம் கழிவு முகாமைத்துவ மத்திய நிலையம் ஒன்றை நிறுவுவதற்கு தேவையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதாகவும்.	திண்மக் கழிவு முகாமைத்துவம் ஒழுங்காக செயற்படுத்தப்பட வேண்டும்.

3.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2021 ஆம் வருடத்தில் கூட்டுப் பசளை உற்பத்திக்காக ரூபா 485,500 செலவு செய்து பல்நோக்கு துண்டாக்கும் இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், 2024 ஆம் வருட இறுதி	கழிவு முகாமைத்துவ மத்திய நிலையம் நிறுவப்பட்ட பின்னர் இந்த இயந்திரத்தை பயன்பாட்டுக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக.	செயற் திட்ட நடவடிக்கைகள் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டு எதிர்கால நடவடிக்கைகள்

வரையிலும் எதிர்பார்த்த விளைவுகள் கிடைக்கப் பெறாமல் கைவிடப்பட்டிருந்தது.		நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.
(ஆ) எரிபொருள் பரீட்சிப்பொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், நிறுவனத்தில் காணப்படுகின்ற 11 வாகனங்களுக்காக எரிபொருள் எரிவு பரிசீலனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	சபையிடம் காணப்படுகின்ற வாகனங்களுக்காக எரிபொருள் எரிவு பரிசீலனை மேற்கொள்வதற்கு பிரதான செயலாளர் பொறியியலாளர் சேவை அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக.	சொத்துக்கள் முகாமைத்துவம் முறைமையாக்கப்பட்டு சுற்று நிருபத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

3.4 ஏனைய அமைப்புகளுக்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 19(XII) ஆம் பிரிவின் பிரகாரம், சபைக்கு உரித்தான காணியில் அல்லது கட்டிடத்தில் ஒரு பகுதியை 03 வருடங்களுக்கு மேற்பட்ட நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்கப்படும் போது, உள்ளூராட்சி விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சரிடம் முன் அங்கீகாரம் பெற்றிருக்க வேண்டும். இருப்பினும் 20 வருடங்களை அதிகமான நீண்ட கால குத்தகை ஒப்பந்தத்தின் அடிப்படையில் குறித்த விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் முன் அங்கீகாரம் இன்றி சபையின் கட்டிடத்தின் கூரையில் சூரிய மின்சக்தி பொருத்துவதற்கு சினோ லங்கா பவர் ஜெனரல் தனியார் கம்பெனிக்கு வழங்கப்பட்டிருந்தது.	அலுவலகத்தின் கட்டிடத்தின் கூரையை திருத்தம் நடவடிக்கை மேற்கொள்ள தேவை இருந்ததுடன் சோலா பவர் சிஸ்டம் பொருத்துவதற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை என்பதாக உள்ளூராட்சி ஆணையாளர் அவர்களின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக.	வருமானங்களை ஈட்டிக் கொள்ளக் கூடிய வகையில் ஒப்பந்தங்கள் திருத்தப்பட்டு சட்ட அறிவுரைகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

3.5 மனித வள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபையின் அனுமதிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை மற்றும் உள்ளவாறு காணப்படும் ஊழியர் எண்ணிக்கையை கவனத்திற் கொள்ளும் போது 05 பதவிகளில் 10 வெற்றிடங்கள்	புதிய நியமங்களை பெற்றுக் கொடுப்பதில்லை என்ற அரச கொள்கை தீர்மானத்தின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு இடை நிறுத்தப்பட்டதன்	வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காணப்படுவதாக வெளிப்படுத்தப்பட்டது. இந்த வெற்றிடங்களை துரிதமாக நிரப்புவதற்கு அவதானம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.	காரணமாக அந்த வெற்றிடங்களை நிரப்பிக் கொள்வதற்கு முடியாது உள்ளதாக.	

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மாகாண திறைசேரி PT/18/2022 கொண்ட 2022 திசெம்பர் 15 திகதிய சுற்றறிக்கை பிரகாரம் மற்றும் 1988 பிரதேச சபை நிதி மற்றும் நிருவாக விதி இலக்கம் 168 பிரகாரம் கடந்த ஆண்டிற்குரிய கணக்கு பொழிப்பின் விபரங்கள் மற்றும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் மற்றும் வகைப்படுத்தல் கூற்றுகளுடன் ஒவ்வொரு ஆண்டின் கணக்குகளையும் அடுத்த ஆண்டு பெப்ரவரி 28 திகதியிற்கு முன்னர் அதிகாரியினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் கணக்குகள் 2024 ஏப்ரல் 10 திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.	விடய உதிதியோகத்தர்கள் இல்லாமையின் காரணமாக இந்த தாமதம் இடம் பெற்றிருப்பதுடன் எதிர்வரும் ஆண்டிலிருந்து குறித்த தினத்தில் கணக்காய்வு தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக.	மாகாண திறைசேரி சுற்று நிருபத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவீனம் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுக்கு இடையே ஒப்பிடும் போது 06 வருமான விடயங்களில் 2.32 சதவீதம் முதல் 150.92 சதவீதம் வரையிலும் 04 செலவின	குறைந்த வருமானம் ஈட்டுகின்ற சபை ஒன்றாக காணப்படுவதுடன் பாதீட்டின் மூலம் திட்டமிடப்படுகின்றதன் அடிப்படையில் வருமானங்கள் கிடைக்கப் பெறாமை காரணமாக செலவுகளை முகாமைத்துவம் செய்து கொள்வதற்கு ஏற்படுதல்,	பாதீட்டை நடைமுறை சாத்தியமாக தயாரிக்க வேண்டும்.

விடயங்களில் 12.65 சதவீதம் முதல் 52.75 சதவீதம் வரையிலும் விலகலொன்று அவதானிக்கப்பட்டதுடன் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	கூடுதலான விடய ஏற்பாடுகளை சேமிப்பதற்கு அந்த விடயம் பாதித்திருந்ததுடன், எதிர்காலத்தில் முறையான முகாமைத்துவத்தின் மற்றும் கட்டுப்பாட்டுடன் பாதீட்டை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக.	

4.3 சுற்றாடல் பிரச்சினைகள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளாததன் காரணமாக வன விலங்குகள் கழிவுகளை உண்பதற்காக பாதைகளுக்கு வருவதனால் பாதைகள் நெருக்கடிக்குள்ளாகுதலின் அடிப்படையில் விலங்குகளும் அதே வேளை பிரதேசவாசிகளும் பிரச்சனைக்குரிய நிலைமைக்கு முகம் கொடுத்துள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.	எந்த ஒரு சுற்றாடல் பிரச்சினையும் கோமரங்கடவல பிரதேசத்தினுள் இதுவரை இடம் பெற்று இருக்கவில்லை என்பதுடன் அவ்வாறான காரணம் தொடர்பாக பொதுமக்களிடம் இருந்து எந்த ஒரு முறைப்பாடும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை என்பதாக.	கழிவுகளை அகற்றுவதற்காக பொருத்தமான நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்

4.4 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபையினால் 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்திலுள்ள நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களையும் இலக்குகளையும் மற்றும் 05 அளவுகோல்களை இனங்கண்டிருந்ததுடன் அவற்றில் 03 இயக்க செயற்பாட்டுடன் காணப்பட்டன. அந்த இலக்குகளின் செயற்பாடுகளை மதிப்பீடு செய்ய பிரதான செயலாற்றுகை அளவுகோல்களை (KPI) மற்றும் அவற்றின் உண்மையான செயற்பாட்டினை அறிக்கை இட்டிருக்கவில்லை.	பிரதேச சபை மட்டத்தில் செயற்படுத்த முடியுமான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு அந்த இலக்கு மையப்படுத்தபட்ட நோக்கங்களை அடைந்து கொள்ள எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் தொடர்புடைய அளவுகோல்களை அடைய வேண்டும்.